**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 3, Issue - 1, November 2023** **E-ISSN: 2583-0481**

# Depiction of Social Evils in the Short Story *Valayatha Panaigal*

**Dr. K. Selvaeswari,** Assistant Professor of Tamil, SFR Women's College, Sivakasi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0059-2635**
**DOI: 10.5281/zenodo.10389527**
**Received:** 21 July 2023; **Revised:** 15 August 2023; **Accepted:** 27 August 2023; **Available online:** 26 November 2023.

## Abstract

*Literature is a mirror reflecting the social environment of a society. Problems often arise due to the environment in which people depend on others. Life is a boom for a labourer but his wishes are tarnished by the unethical social norms. The upper-class people exploit of labour workforce and life from time to time. A lot of short stories, novels and poems are published focusing on these atrocities. The solution to this problem can only be found when individual attachments are put to rest and peace is achieved. The day when the condition of living in love and common life without caste and religion can be seen as the dawn in Tamil Literature. The real events seen in today's practice reflect the problems experienced by the people in the modern world. Like a palm tree, some people stand upright to achieve their goals in life. Those who know the family situation can find success without suffering. Due to the change in civilization, the basic needs of human beings create various problems. The author R. Nandagopal has recorded the life situations of the people in his story "Valayatha Panaigal". Hence, this paper studies the social evils as portrayed in the novel.*

**Keywords:** Depiction, Social Evils, Short Story, *Valayatha Panaigal.*

## References

[1] Srinivasan, S. *Thirukkural*. Pallavaram, Chennai, 2007.
[2] R. Nandagopal. *Valaiyatha Panaigal.* New Century Book House, Chennai, 2015.
[3] Bharatiyar. *Bharathiyar Kavithaigal*. Leo Book Publishers, Chennai.
[4] "Puthumaipithan Kavithaigal, Oru Nal Kalinthathu." http://tinyurl.com/5n8c644e Accessed on 15 August 2023.
[5] Ga. Perumal. *Kavimani Kavithaigal*. Sri Senbaka Pathipagam, Chennai, 2002.
[6] Ki, Rajanarayanan. *Thernthetugapatta Kavithaigal.* Annam Pathipagam, Thanjavur, 2020.
[7] Rajamkrishnan. *Kalanthoorum Pengal*. Kalacuvatu Pathipagam, Chennai, 2002.
[8] Tamil Oli. *Makkal Kavithaigal.* http://tinyurl.com/42m4wmwu Accessed on 15 August 2023.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# *வளையாத பனைகள்* சிறுகதை உணர்த்தும் சமூக அவலங்கள்

**முனைவர் கு. செல்வஈஸ்வரி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0059-2635**
**DOI: 10.5281/zenodo.10389527**

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியங்கள் சமூகச் சூழலைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாக வலம் வருகின்றன. மனிதன் பிறரை அண்டிவாழும் சூழல் நிலவுவதால் அடிக்கடி சிக்கல்கள் ஏற்படுகின்றது. உழைப்பவனுக்கு வாழ்வில் ஏற்றம் என்பது அரிதான செயலாகின்றது. பணம் படைத்தோரின் ஆளுமையால் உழைப்புச்சுரண்டல் காலந்தோறும் தென்படுகின்றது. இக்கொடுமைகளை மையப்படுத்தி நிறைய சிறுகதை, நாவல், கவிதை உட்பட அனைத்து படைப்புகளும் வெளியாகின்றன. தனிமனித பற்றுக்கள் ஓய்ந்து அமைதிநிலவினால் மட்டுமே இப்பிரச்சனைக்கான தீர்வு பெற முடியும்.சாதிமத பேதமின்றி அன்போடு, பொதுமையாக வாழும் நிலை என்றைக்கு நிலவுமோ அன்றே விடியல் காணலாம்.*

**குறிப்புச் சொற்கள்:** சித்தரிப்பு, சமூக தீமைகள், சிறுகதை, *வளையாத பணைகள்.*

**முன்னுரை**

இன்றைய நடைமுறையில் காணும் எதார்த்தமான நிகழ்வுகள் அனுபவிக்கும் பிரச்சனைகள் பிரதிபிம்பமாக உருவெடுக்கின்றது. பனைமரத்தினைப் போன்று சிலர் வாழ்வில் தனது லட்சியத்தை அடைய வளையாமல் நிமிர்கின்றனர். குடும்பச் சூழ்நிலை அறிந்து வாழ்வோரே துன்பமின்றி வெற்றி காணமுடியும். நாகரிக மாற்றத்தால் மனிதனது அத்தியாவிசமான தேவைகள் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றது. இந்நூல் ஆசிரியர் இரா.நந்தகோபால் அவர்கள் தமது பத்து கதைகளிலும் அனைத்து தரப்பு மக்களின் வாழ்வியலைச் சித்திரிக்கும் வண்ணம் "வளையாத பனைகள்" என்ற ஒற்றைத் தொகுப்பு வழி பதிவுசெய்துள்ளார். இச்சிறுகதையின் வழி மனிதனது பன்முகத் தன்மைகளை சமூக அவலங்களோடு பொருத்திக் காண்போம்.

**முதலாளித்துவம்**

பொருளாதாரத்தில் உயர்ந்த நிலை அடைந்தோரை பணம் படைத்த முதலாளிகள் என்று மதிப்பிடுகின்றோம். இவர்கள் தொழிலாளிகளின் உழைப்பைச் சுரண்டுவதோடு மட்டுமின்றி அவர்தம் நிலைமையைத் தாழ்த்தி குறைத்து பேசவும் செய்வதுண்டு. 'தான்' என்ற அகந்தை ஏழைகளிடம் என்றும் இருப்பதில்லை. 'வளையாத பனைகள்' என்ற முதல் சிறுகதையில், பதநீர் வேலை பார்க்கும் ராயப்பன் முதலாளியால் அவமானம் அடைகிறான். இதனை,

**சின்னப்பயக ஆசைப்படறாங்க. நீ அதுக்கு மேலே அடம்பிடிக்கிற. யோசித்துப் பார்த்தா இது மேட்டரே இல்லஎல்லாப் பனையேறியும் தான் இறக்கித்தர்றாங்க… எங்க போலீஸ் வருது… அப்படின்னாலும் நம்மளை மீறி உள்ள நுழைஞ்சுருவாங்களா. …பனை எங்க பனை. புஞ்சை, எங்க புஞ்சை…. உன் சவுகரியத்துக்கு நாங்க வளைய முடியாதுல்ல என்றார் சற்றுக் கோபத்துடன். (வளையாத பனைகள். ப. 14)**

என்ற சிறுகதைத் தொடர் சுட்டுகிறது. இங்கு கிராமத்துப் பகுதியில் முதலாளிகளின் செல்வாக்கு இன்றுவரை உயர்ந்தோங்கியமை அறியமுடிகின்றது. சட்டத்தில் விழும்சிறு ஓட்டையைப் போல யாருக்கும் வளைந்து கொடுக்காத தன்மையுடன் முதலாளித்துவ வர்க்கத்தினர் வாழ்வதை இச்சிறுகதை அழகாகச் சித்திரிக்கின்றது. இதே கருத்தினை,

**நீதிநெறி நில்லாவம் பருமே - நல்ல**
**நேர்வழி வந்திடச் செய்பவர் ஆர்?**
**ஓதிய மானம் இழந்தவரை உயர்**
**உத்தமர்ஆக்க முயல்பவர் ஆர்? (கவிமணியின் கவிதைகள், பா. 745)**

என்று கவிமணி தம் கவிதைவரிகளில் கூறுவதன் வழி உழைப்பாளர்கள் நேர்மையாக வாழ்ந்தாலும் உலகம் உயர்ந்த நிலையில் வைப்பதில்லை என்பது தெளிவாகின்றது. இச்சிறுகதை வழி மறைமுகமாக பணம் படைத்தோரின் தவறுகளைத் தட்டிக்கேட்கும் உரிமை எந்தத் துறையினருக்கும் இல்லை என்பது வெளிப்படை.

**மனிதநேயம்**

ஒரு மனிதன் சக மனிதனை நேசிப்பதே சிறந்த மனிதநேயம் என்கிறோம். அன்பு, கருணை, ஈகை அடிப்படையில் மனித குணங்கள் வரையறுக்கப்படுகின்றன. பிறருக்குத் தீமை செய்யாது நன்மை பயக்கும் செய்கைகள் செய்பவரை இந்த உலகம் மதிப்பதில்லை. உதாரணமாக ‘வளையாத பனைகள்’ என்னும் முதல் சிறுகதையில் சுப்புக்குட்டி தன் மகனின் விருப்பத்திற்காக கள்ளைத் தயாரிக்க ஏற்பாடு செய்கிறார். ஒரு தகப்பன் தன் மகன் தவறான பாதையில் சென்றால் அவனைத் திருத்துவது அவர்தம் கடமை. மாறாக, தீய பழக்கத்திற்கு துணைபோகும் தந்தையின் செய்கை பின்வருமாறு,

**ஐயா இதுவரைக்கும் நான் இந்த வேலை பார்த்தது இல்லை. இனிமேலும் பார்க்க முடியாது. தயவுசெய்து பிள்ளைகளுக்கு மோசமான வழியைக் காட்டாதீங்க….**

**மனச்சாட்சியை எப்படிக்கொல்வது. பெற்ற பிள்ளைக்குப் போதையை இறக்கிக் கொடு என்று சொல்லும் அப்பனை என்ன சொல்வது ராயப்பனுக்கு ஒன்றும் புரியவில்லை. (வளையாத பனைகள், ப. 13, 15)**

என்ற தொடர்வழி அறியலாம். இங்கு குடிகுடியைக் கெடுக்கும் என்ற பொன்மொழிக்கு ஏற்ப ராயப்பன் மனிதநேயத்தோடு நடக்கின்றார். தவறு செய்வது யாராக இருந்தாலும் அதற்கு ஒரு நாளும் மனசாட்சி உள்ளம் கொண்டவர் துணைபோவதில்லை. ஆனால் சுப்புக்குட்டியோ

தனது மகன் செய்யும் தவறு என்று தெரிந்திருந்தும் தீயபழக்கத்தைக் கற்றுக்கொள்ளத் தூண்டுவது அபத்தமான செயலாகின்றது.

**உழைப்பே உயர்வு**

உழைப்பாளன் வாழ்வில் முன்னேற தன்னம்பிக்கை அவசியம். பிறரை ஏமாற்றாமல் கடினமாக உழைத்து வாழ முற்படுவோர் நிச்சயமாக வெற்றி காணலாம். எவருக்கும் அடிமைப்பட்டு வாழாமல் சோம்பலின்றி தொழில் செய்யும் உழைப்பாளன் உலகமே போற்றும். இதனால் தான் பாரதி, **உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்** என்றான் பாரதி. அதர்மவழியில் செல்வோரைக் கண்டு கொள்ளாமல் நியாயத்துடன் பணிசெய்தாலே நற்பேறு வாய்க்கும். அதுவே உழைப்பின் மீதான நம்பிக்கைக்கு வழிகோலும். இங்கு ராயப்பன் முதலாளிக்குஅடிபணியாமல் தன்மன உணர்வோடு வாழும் திறத்தினை,

> **நீங்க திடமா இருங்க. இதுவரை யாரும் குறை சொல்லாத பொழப்பு பொழைசாச்சு. எங்கேயும் கைகட்டி நின்னதில்லை. இனிமே எதுக்கு மாத்திக்கணும். இந்தத் தோப்பு இல்லைன்னா இன்னொன்னு. உடம்புலே வலு இருக்கு. கையிலே அருவாளும் மட்டக்கம்பும் இருக்கு. எங்கே போனாலும் பொழச்சுக்கலாம் மனதை போட்டு உழப்பிறாதீங்க. தைரியமா இருங்க. (வளையாத பனைகள், ப. 15)**

என்ற தொடர்கள் சுட்டுகின்றது. கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு ஏற்படுவதுபோல உழைப்பவனுக்கு எங்கு சென்றாலும் பொழைக்கலாம் என்ற தன்மான உணர்வை இச்சிறுகதை வழி அறியமுடிகின்றது. இதே கருத்து தற்கால கவிதைகளில் ,

> **விளைவித்தோன் யார், என்றேன் எடுத்துப்போக**
> **வேற்றவன் நீஏன் வந்தாய்? என்று கேட்டேன்**
> **இளைக்கின்ற என் மனைவி மக்களுக்கே… (மக்கள் கவிதைகள், ப. 62)**

என்ற அடிகள் வழி எழுத்தாளர் தமிழ்ஒளி விவசாயிகளின் துணிச்சலை நிலைப்படுத்துகிறார்.

**வறுமை**

“கொடிது கொடிது வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை” என்ற சான்றோரின் வாக்கிற்கிணங்க இன்றுவரை கிராமத்து மக்கள் பிற்படுத்தப்பட்ட நிலையில் தான் வாழ்கின்றனர். வறுமை என்பது ஏழைகளின் வாழ்வில் இருளாய் சூழ்ந்து வருகின்றது. ‘கிராமத்துக் கணக்கு’ என்னும் சிறுகதையில் செல்லத்தாயின் வறுமை நிலை பற்றி கூறுகையில் உணவு தயாரிக்க அடுப்பு வசதியின்றி வாழ்கின்றமையை,

> **விறகு அடுப்ப கட்டித்தானே மாரடிக்க வேண்டியிருக்கு. ஸ்டவ்வுக்கு ரேஷன் மண்ணெண்ணை பத்து நாள் தான் வருது. மிச்சநாள்ல விறகுதான். ஒரு காஸ் கனெக்சன் வாங்கிரலாம்னு பாக்கறேன். முடியமாட்டேங்குது. (வளையாத பனைகள், ப. 31)**

என்ற தொடர்கள் பதிவுசெய்கின்றன. இதே கருத்தினை புதுமைப்பித்தன் சிறுகதையில்,

**உள்ளே புகைத்திரைக்கு அப்பாலிருந்து வீடோ லட்சணமோ விறகைத் தான் பார்த்துப்பார்த்து வாங்கிக் கொண்டு வந்தியளே! ஒங்கிளுக்கின்னு தண்ணீலே முக்கிக் கொடுத்தானா? எரியவே மாட்டுதில்லை?… (புதுமைப்பித்தன், ஒருநாள் கழிந்தது, http://tinyurl.com/5n8c644e)**

காணலாம். இங்கு எவ்வளவு தான் கணக்குப் போட்டு வாழ்ந்தாலும் அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகின்றது. கிராமத்துக் கணக்கு நவீன தொழில் நுட்பக் கருவிகள் கண்டுபிடிப்பு இன்றும் கிராமப்புறத்தைச் சென்று அடைவதில்லை என்பது வெளிப்படை.

**உறவுமுறை**

ரத்த பந்தங்கள் உறவு என்றைக்கும் மாறாதது மட்டுமல்ல மறையாத ஒன்றும் கூட. உடன்பிறந்த சொந்தங்கள் ஒருவருக்கொருவர் உதவிசெய்வதும் விட்டுக் கொடுப்பதும் சிறந்த மனிதநேயம் ஆகும். பொதுவாக, ஆணின் உறவை விட பெண்களின் உறவுநிலை சற்று உறுதிபட அமைவதுண்டு என்பர். இருப்பினும் கால மாற்றத்தால் பொருளாதாரத்தில் உயர்ந்த நிலையில் வாழ்வோர் தனது உறவுகளோடு இணைய மறுக்கின்றனர். காரணம், தான் சேகரித்த பொன், பொருள் பாதுகாப்புக்கருதி உறவினரை வெறுத்து ஒதுக்குகின்றனர்.ஏழ்மையில் வாழும் செல்லத்தாய்க்கு தனது அக்காவான சுப்புத்தாய் உதவிபுரியாமல் ஒதுங்கி நடந்து கொள்ளும் செயல் உறவுமுறை விரிசலை பின்வறுமாறு எடுத்தியம்புகிறது.

**உடன்பிறந்த உறவு. எப்படி இப்படி நடக்க முடிகிறது. தங்கச்சி வீட்டுப்பொருள்கள் வேணும். அப்ப புருஷன் சந்தோசமா ஏத்துப்பான். ஆனால் பண விஷயம் என்றால் அது வேறாகி விடுகிறது. இவள் சம்பளப் பணமும் வட்டிக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை ஊரே சொல்லுகிறது. என்ன நடிப்பு, பேச்சுத் திறமை. அவளுக்கு ஆத்திரம், ஆத்திரமாக வந்தது. என்ன உடன் பிறந்தாள் இவள்?… (வளையாத பனைகள், ப. 38)**

என்பதில் உழவுக்கடன் காரணமாக உதவிபுரியாமல் ஒதுங்கும் இன்றைய உறவுநிலையைப் படம்பிடித்துக்காட்டுகிறார் ஆசிரியர் இரா. நந்தகோபால். அறுபட்ட தொப்புள்கொடியாய் பந்தங்கள் உறவு முறிந்து விடுகின்றது. மற்றொரு கதையான, ‘அவ்வா’ என்னும் சிறுகதையில் பெற்ற தாய் இறப்புநிகழ்வில் சொத்துக்காக அக்கா தங்கை உறவு விரிசல் அடைகின்றது.

**உன்னை யாரு பார்க்கச் சொன்னா? எங்கம்மாவை பாருன்னு உன்னையும், உன் புருஷனையும் யார் தாங்குனா…. அது என்ன சும்மாவா இருந்திச்சு. நாலு வருசம் உன் வீட்டிலே கூலி வாங்காத வேலைக்காரியாத் தானே இருந்துச்சு. காடு கண்ணிக்கு ஆள் கூட்டிப்போறது. காடுகளுக்கு காவல் காக்கிறது. களத்து வேலை பார்க்கிறதுன்னு அது சாகற வரைக்கும் உங்க வீட்டுக்குத் தானே உழைச்சுக் கொட்டுச்சு… இப்போ அதுக்காக அடுத்தவுகளுக்கு சேர வேண்டியதும் எனக்குத்தான்னு அமுக்க பார்த்தா சும்ம விட முடியுமா?… (வளையாத பனைகள், ப. 73)**

இங்கு இறுதிவரை பெற்றதாயினைப் பராமரித்த பெண்ணை அவதூறாக சகோதரிகள் பழிக்கின்றனர். ஒருமகளாக ஈன்ற தாய்க்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிசெய்யாது

விட்டுச் சென்ற உறவுகள் இறுதியில் சொத்திற்கு பங்கு போடுகின்ற அபத்தமான செய்கை அப்படியே இன்றைய வாழ்வோடு எதார்த்தமாக பதிவாகிஉள்ளது.

**மருத்துவர் செய்கை**

கடவுளுக்கு அடுத்தபடியாக உயிரினங்களைப் பாதுகாக்கும் நல்லுள்ளம் கொண்டவர் மருத்துவர் எனலாம். இயற்கையான முறையில் உணவு உட்கொண்டு வாழ்ந்தால் நோய்கள் அண்டாது. பிணித்தொற்றினை நீக்கினால் ஆயுள் நீடிக்கும். தற்காலத்தில் மருத்துவம் என்பது வியாபார நோக்கமாக மாறிவிட்டது. யாராக இருந்தாலும் காசு இருந்தால் உயிர் பிழைக்க முடியும் என்ற நிலை உருவாகிவிட்டது. “பாசாக்கு மனிதர்கள்” என்னும் சிறுகதையில் மலர்விழி உறவினரிடையே பாசாங்கு செய்யும் மருத்துவராக செயல்பட்டமை பின்வருமாறு காண்போம்.

> **அப்படியா! சின்ன மாமியாருட்ட கூட ஊசி போட காசா … இது என்ன பழக்கம்” என்றாள், பொன்னம்மா வாய் பிளந்து. போன தடவை போயிருந்த போது மெடிக்கல்ஸ்ல மருந்து வாங்க வேண்டாம். நல்ல மருந்து இருக்காது. நானே வெச்சிருக்கேன்னு மருந்தக் கொடுத்து அதுக்கு காசு வாங்கிட்டா. இங்க வந்து பார்த்த எம்மகன் சொல்றான். அது அவுகளுக்கு ஓசியா மருந்துக் கம்பெனி கொடுத்த சாம்பிள் மருந்தாம். அதுக்கும் வெலை போட்டு எடுக்கிறாக. அவுக பொருளுன்னா வெல. நமதுன்னா ஓசியா… (வளையாத பனைகள், ப. 113-114)**

இங்கு இலவச மருந்தினைக் கூட விற்று பணம் சம்பாதிக்கும் மருத்துவ சூட்சமம் அறியமுடிகின்றது. தொழில் அடிப்படையில் உறவிற்கு மதிப்பின்றி பாசாங்கு செய்யும் மனிதராக மனித மனம் மாற்யமடைவதை இக்கதை உணர்த்துகின்றது.

**கலாச்சார மாற்றம்**

இன்றைய கால கட்டத்தில் பண்பாடு மற்றும் கலாச்சாரங்கள் நிறைய மாற்றம் கண்டுள்ளன. நடை, உடை பாவனை செய்கைகள் மற்றும் சடங்கு சம்பிரதாயங்கள் உட்பட அனைத்திலும் வெவ்வேறு மாற்றங்கள் நிலவி வருகின்றது. உதாரணமாக திருமணம் என்றாலே இன்பம் நிறைந்த ஒரு நிகழ்வாக முன்பு அமையப்பெற்றது. காலமாற்றம் செல்லச்செல்ல திருமண நிகழ்வுகள் முற்றிலும் தற்பெருமைக்குரிய செயலாக அமைந்து வருகின்றது. அதாவது பாத்திரப்பண்டங்கள், நகைகள், பணம் உள்ளிட்ட சீதணப்பொருட்கள் எல்லாம் மணமற்ற மலர்ச்செண்டுகளாக மாற்றமடைந்து விட்டது. இதனை, ‘அலங்காரப்பூக்கள்’ என்னும் சிறுகதையில் ஆசிரியர் பரசுராமன் வீட்டுதிருமண நிகழ்வின் வழி அறியலாம்.

> **கிருஷ்ணசாமி எதிரே பார்த்தார். எப்படியும் ஐந்நூறு பூங்கொத்துக்கள் இருக்கும். குறைந்தபட்சம் ஒரு பூங்கொத்துக்கு இருநூறு என்றால் கூட ஒரு லட்சம் ரூபாய் ஆகிடும். இன்னும் நிறைய வரலாம். என்ன பலன் இதனால், ஒரு லட்சம் ரூபாயை சும்மா எறிவது மாதிரி. (வளையாத பனைகள், ப. 126)**

என்ற தொடர்கள் வழி நாகரிக மாற்றத்தால் கலாச்சார நிகழ்வுகள் வாடும் மலராக உருவெடுத்தமை இங்கு பதிவாகின்றது. இதுவும் ஓர் பண்பாட்டுச் சீரழிவு எனலாம்.

**கருமிமகன்**

நன்மக்களைப் பெறுவது தான் பெறுதற்கரிய பேறுகளில் சிறந்தது. இதனால் தான்,

**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல். (குறள் - 67)**

என்ற குறட்பாவழி தந்தை மகன் மீது கொண்ட பற்றினைப் பேரின்பத்தோடு எடுத்துரைக்கிறார் வள்ளுவர். ஆனால் இன்றைய கால கட்டத்தில் மகன் தந்தையை ஏமாற்றி வாழும் நிலை ஏற்படுகின்றது. அதாவது பிள்ளைகளை நம்பி வாழும் பெற்றோரை ஈன்ற மக்களே பணத்திற்காக ஏமாற்றி வாழும் கேலிச்சித்திரம் “மிஸ்மாவின் மிஸ்டுகால்” என்ற சிறுகதை சித்திரிக்கின்றது.

**அவர் ஐம்பது ரூபாய் கொடுத்தால் இருபது ரூபாய்க்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்துவிட்டு முப்பது ரூபாயை பையில் வைத்துக்கொள்ளும் அற்பமான புத்தி அவனுக்கு (வளையாத பனைகள், ப. 135)**

**இப்படிச்சொன்னா எங்க அம்மாவும் அப்பாவும் டென்ஷன் ஆயிடுவாங்க. இப்ப கொடுத்த லிஸ்ட்ல உள்ள சாமான் வந்தா ரெண்டு வருசத்து பேஸ்ட், பிரஷிற்குக் கவலை இல்லை. பேஸ்ட் எக்ஸ்பயரி எப்படியும் இரண்டு வருஷம் இருக்கும்… (வளையாத பனைகள், ப. 141)**

இங்கு மகன் தனது தந்தையின் பாசத்தை வியாபர நோக்கோடு செயல்படுத்துவது கருமித்தனமாக அமைகின்றது. நல்ல புதல்வரைப் பெறுதல் என்பது அவரவர் வினையால் அமையும் என்பது ஈண்டு திண்ணம்.

**பெண்ணடிமை**

பெண்கள் நாட்டின் கண்கள் என்று புகழாரம் பூசுகின்றோம். பெண்களை அடக்குமுறை செய்யும் வழக்கம் இன்றுவரை நிலவுகின்றது. ஆணாதிக்கப் போக்கில் பெண்கள் தனது பேச்சுத்திறமை, எழுத்துரிமை, சொத்துரிமை, மற்றும் செய்கைகள் அனைத்தும் ஆணுக்கு மிஞ்சி செயல்படக்கூடாது என்ற வரையறை உள்ளது. வருமானம், தொழில் அறிவியல் உள்ளிட்ட அனைத்திலும் பெண்களின் பங்கு ஆணைவிட சற்று உயர்ந்து உள்ளது. நவீன தொழில் வளர்ச்சியில் பெண்ணறிவு முன்னேற்றமடைவதைக்கண்டு ஆணினம் முடக்கும் தன்மையினை “மிஸ்மாவின்மிஸ்டுகால்” என்ற சிறுகதையில் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார்.

**…அவர் ஹலோ சொல்லிவிட்டு செல்லை ஆஃப் பண்ணவில்லை. இதைப் பேச ஆரம்பித்ததும் ரிகார்ட் போட்டு விட்டேன். என்ன புள்ள வளக்கிற . பொம்பளப் புள்ளய லட்சணமா வளர்க்கறே? எதுக்கு இவளை செல்லை நோண்டே விடறே? எப்பவும் அடுத்தவங்க விஷயத்தில் மூக்கை நுழைக்கிறது. இவளுக்கு வழக்கமா போச்சு. பொம்பளப்புள்ளைய கண்டிச்சு வையுங்க,… (வளையாத பனைகள், ப. 142)**

இங்கு தவறு செய்யும் ஆணினத்தை அடையாளம் காட்டும் பெண்மை ஒடுக்கப்படுகின்றன. பெண்ணடிமைத்தனம் குறித்து பாரதியார் பாடுகையில்,

> **பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவிபேணி வளர்த்திடும் ஈசன்மண்ணுக்குள்ளே சில மூடர் அந்தமாதர் அறிவினை கெடுத்தான்... (பாரதியார் கவிதைகள், ப. 101)**

என்ற கவிதை வரிகள் சமூகத்தில் பெண் கட்டுப்பாடு தளர்த்து நீக்கப்பட வேண்டும் என்பதை பாரதி உள்ளிட்ட பல்வேறு அறிஞர்கள் ஆதரவளித்தமை ஈண்டு உணரத்தக்கது.

**குடும்பச்சிக்கலும் தீர்வுகளும்**

இல்லற வாழ்வில் கணவன் , மனைவி இடையிலான உறவு என்பது பன்முகத்தன்மை கொண்டது.விரிசல் அடைந்தால் இருதலைக்கொள்ளியாய் வாழ்வு நிலைக்குலைந்து விடும்.குடும்பச்சிக்கல் எழக்காரணம் நாகரிக மாற்றமே. தன் மனைவி கற்பு நிறைந்தவளாகவும், குடும்பப்பாங்கிற்கு ஏற்றவளாகவும் இருப்பதையே ஆண்சமூகம் எதிர்பார்க்கின்றது. தனக்கே உரிமையானவள் என்பதால் தான் திருமணத்திற்குப்பின்னர் பெண்கள் உடை அணிவதில் கூட சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. இக்கருத்தினை மையமாகக்கொண்டு எழுதப்பட்ட ‘ஒளிக்கீற்று’ என்னும் கதையில்,

> **அடுத்து ட்ரெஸ் லவ் பண்ற போது ரொம்ப நாகரிகமா உடுத்தறதை ரெண்டு பேருமே பெருமையாக நினைப்பாங்க. கல்யாணம் ஆன பின்பு அது அவனுக்குப் பிடிக்கவில்லைன்னு சொல்றான். ...மனைவியை மற்றவர்கள் ரசிக்கக் கூடாது என்கிறது எல்லா ஆண்கள் மனோபாவம். அதையும் ரெண்டு பேரும் புரிஞ்சுக்கல்ல. (வளையாத பனைகள், ப. 166)**

காணமுடிகின்றது. இங்கு சுகன்யா என்ற பெண்மணி திருமணத்திற்குப் பின்னரும் நாகரிகமாக வாழ முற்படுவதால் அவளுக்கும், கணவனுக்கும் இடையே பிரச்சனை எழுகின்றது. கலாச்சார மாற்றம் சீர்குலையாமல் இருக்க மேற்கத்திய உடைகள் மூடக்கப்படுகின்றன. இது அடக்குமுறையல்ல அன்பின் வெளிப்பாடு.

குடும்பத்தில் அமைதி நிலவ பல்வேறு சூழ்நிலைகள் உறுதுணைபுரிவது இயல்பாகும். குழந்தையாகிய மழலைச் செல்வம் கிட்டும் வரை மணஉறவு அமைதி பெறுவதில்லை. ஒருவரை ஒருவர் விட்டுக் கொடுத்து மதிப்புடன் நடவாதால் மட்டுமே பிரச்சனைகள் வருவதில்லை. இல்லையேல் பல இன்னல்கள் ஏற்பட்டு மனஉளைச்சல் அதிகரிக்கும். இக்கூற்றினை,

> **ரெண்டு பேரும் முதல்ல உங்களை மதிங்க. எல்லோரையும் மதிச்சுப் பழகுங்க. எல்லாப் பெரியவங்களும் உங்கள மாதிரி ஸ்டேசை தாண்டி வந்தவங்க தான். அப்ப இருந்த சூழ்நிலைகள் வேற. இப்ப இருக்கிற சூழ்நிலைகள் வேற .இப்படி உடுத்து. அப்படி டிரெஸ் போடுன்னு நாங்க இப்ப சொல்ல முடியாது.அது சரியாகவும் இருக்காது. உங்க கல்யாணத்திற்கு முன்பு இருந்த சூழ்நிலைகள் வேறு. பழசை நெனச்சிக்கிட்டு அப்படியே இருக்க முடியாதும்மா.... (வளையாத பனைகள், ப. 167-168)**

என்ற சிறுகதை மெய்ப்பிக்கின்றது. இதே கருத்து மற்றொரு படைப்பாளர் தாக்கமாக,

> **ஒழுக்கம் என்று பேசப்படும் போது பொதுவாழ்க்கை என்று பேசப்படும்போது அதில் பங்கேற்கும் இருபாலருக்கும் உரியதாக வேண்டிய பொறுப்பில் பழிப்பொறுப்பு மட்டும் பெண்ணிடமே சுமத்தப்படும்... (காலந்தோறும் பெண், ப. 3)**

என்பதில் கணவன் மனைவி இருவரும் சந்தெகம் இன்றி வாழ்ந்தால் குடும்ப ஒற்றுமை தழைக்கும் என்று ராஜம்கிருஷ்ணன் தனது படைப்பில் எதார்த்தமாக எடுத்துரைக்கிறார். இக்கதைகள் வாயிலாக குடும்பச்சிக்கல் ஏற்படாமல் வாழ முற்படுவோர் சக மனிதரை மதிப்புடன் நடத்த வேண்டும். இல்லை என்றால் நம் நிலை தாழ்ந்து வீழும்.

**முடிவுரை**

இதுகாறும் உழைப்பை அள்ளிக் கொடுத்து விட்டு ஏமாந்து நின்றாலும் தன் மானம் இழக்காமல் வாழ்ந்தால் வெற்றி நிச்சயம். காயம்பட்டாலும் மீண்டு எழும் உறவுமுறை சுயமரியாதைக்குரிய உன்னதநிலை அடையாளப்படுத்துகின்றது. குடும்பப்பிரச்சனைகளை மனதில் போட்டுக் கொள்ளாமல் பகிர்ந்தால் மனதிருப்தியும் சந்தோஷம் கைக்கூடும் என்பது அறவுரையாக உணர்த்தப்படுகின்றது.

**குறிப்புகள்**

[1] சீனிவாசன், ச. *திருக்குறள்.* கண்டோன் மென்ட், பல்லாவரம், சென்னை, 2007.

[2] இரா. நந்தகோபால். *வளையாத பனைகள்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2015.

[3] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* லியோ புக் பப்ளிஷர்ஸ், சென்னை.

[4] “புதுமைப்பித்தன் சிறுகதை, ஒருநாள் கழிந்தது.” http://tinyurl.com/5n8c644e 15 ஆகஸ்ட் 2023 அன்று அணுகப்பட்டது.

[5] அ. கா. பெருமாள். *கவிமணியின் கவிதைகள்.* ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, 2002.

[6] கி, ராஜநாராயணன். *தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்.* அன்னம் பதிப்பம், தஞ்சாவூர், 2020.

[7] ராஜம்கிருஷ்ணன். *கலந்தோறும் பெண்.* காலச்சுவடு பதிப்பகம், சென்னை, 2002.

[8] தமிழ் ஒளி. *மக்கள் கவிதைகள்.* http://tinyurl.com/42m4wmwu 15 ஆகஸ்ட் 2023 அன்று அணுகப்பட்டது.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.